(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 53.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2023 செப்தெம்பர் 05, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2845/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சார நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இவ்வாறான மின்சார நெருக்கடி ஏற்படுமென அதிகாரிகளால் எதிர்வு கூறப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மின்சார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகள் இனங்காணப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவ்வாறான மின்சார நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2932/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொலிஸ் அலகு தாபிக்கப்பட்ட திகதி மற்றும் அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலகு அகற்றப்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையில் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் அதிகரித்துள்ள பின்னணியில் மேற்குறிப்பிட்ட பொலிஸ் அலகு அகற்றப்பட்டமையானது சட்டரீதியான மற்றும் தர்க்க ரீதியான அடிப்படையின்றி மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பொலிஸ் அலகினை மீண்டும் தாபிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2971/2023

கௌரவ ஹேஷா விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்பதிவ யாத்திரைகளை ஒழுங்கு செய்கின்ற பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முகவரிகள் என்பன இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தம்பதிவவுக்கான யாத்திரைகளை மேற்கொண்ட இலங்கையர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) தம்பதிவவுக்கு யாத்திரைகளை ஒழுங்கு செய்யும் சில நிறுவனங்கள் யாத்திரிகர்களின் பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அதன் காரணமாக யாத்திரிகர்கள் அதிக சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், தம்பதிவவுக்கு யாத்திரைகளை ஒழுங்கு செய்யும் நிறுவனங்களை ஒழுங்குறுத்துவதற்கும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

3078/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனிவெளி புகையிரதப் பாதையை நவீனமயப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டமானது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

3095/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினால் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறித்த கடன் பெறப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கடன், பயன்மிக்க வகையில் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்குறித்த விமான நிலையத்தை பொருளாதாரத்திற்கு சுமையின்றி பேணிச் செல்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

3107/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2020 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நெடுந்தீவுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i)இல் குறிப்பிடப்பட்ட சுற்றுலாத் தளங்களில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சுற்றுலாத் தளங்களை புனரமைப்புச் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் புனரமைக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களை முறையாக பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

3173/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் வருடாந்தம் பேணிச் செல்லப்பட வேண்டிய அரிசி கையிருப்பு யாதென்பதையும்;

(ii) அக்கையிருப்பைப் பேணி வரும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) கையிருப்பைப் பேணுவதற்காக அரிசியைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தினால் பேணிவரப்பட்ட அரிசி கையிருப்பானது ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் குறித்த அரிசி கையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட அரிசியின் அளவானது ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அரிசி கையிருப்பிலிருந்து எந்தெந்த நிறுவனங்களுக்கு அரிசி விடுவிக்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வருடாந்த தேவைக்குப் போதிய அரிசி கையிருப்பு பேணிச் செல்லப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) போதியளவு அரிசி கையிருப்பினைப் பேணிச் செல்லாததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

3231/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டு மீன் பிடிப் படகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(iii) அதன்போது கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்கும் மீன்பிடிப் படகுகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் இலங்கை கடற்படையினரால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் தற்போது நடைமுறைப்படுத்தப்படாதுள்ள பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(iv) அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

3527/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குரிய விளம்பரப் பலகைகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விளம்பரப் பலகைகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக கிடைத்துள்ள வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் மேற்படி விளம்பரப் பலகைகள் பெற்றுக் கொடுக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(v) மேற்படி விளம்பரப் பலகைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3537/2023

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தனரா என்பதையும்;

(iii) இல்லையெனில், அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆட்சேர்ப்புகள் எப்பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதையும்;

(v) எதிர்பார்க்கப்பட்ட உயர் உற்பத்தித்திறன் மேற்படி ஊழியர்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவு (திருத்தம்),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

3.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

4.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 28 ஆம் திகதிய 2338/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 20 ஆம் திகதிய 2341/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

7.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

*8.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18

இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 10, 11, 26, 31(ஈ), (உ),(ஊ),(எ) மற்றும் (ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ஞ) பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2326/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*24.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ(2) ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல்.21 ஆம் திகதிய 2328/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்,— ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

31.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.